LIBRARY
22 DEC 2016
UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருடமுதலாம் அரையாண்டு கல்விமாணித் தேர்வு– 2011/2012

## (2016 - ஏப்ரல்/மே)

**ED- 3122 மாணவர் பொருத்தப்பாடும் ஆலோசனை வழங்கலும் (Students Adjustment and Counseling)**

நேரம்: 02 மணித்தியாலங்கள்

பகுதி ஒன்றில் விரும்பிய இரு வினாக்களுக்கும் பகுதி இரண்டில் விரும்பிய ஒரு வினாவுக்கும் விடைஎழுதுக.

---

### பகுதி - I

01. அ)“கல்வியைப் பொருத்தமாகப் பெற்றுக்கொள்ள மாணவர்களின் பொருத்தப்பாடு முக்கியமானதாகும்.” இந்தவகையில் மாணவர் பொருத்தப்பாட்டின் முக்கியத்துவம்பற்றி நீர் விளங்கிக் கொள்வது யாது? (15 புள்ளிகள்)

ஆ)“மாணவர்களின் பொருத்தப்பாட்டைப் பொறுத்தே கல்விச் செயற்பாடுகள் வெற்றியளிக்கும்.” என்பதற்கான நியாயங்களை முன்வைத்து விளக்குக? (15 புள்ளிகள்)

02. அ)மாணவர்களின் பொருத்தப்பாட்டைச் சீர்குலைக்கும் உளரீதியான தன்மைகளை அடையாளப்படுத்தி, அவற்றுக்கான தீர்வுகளை முன்வைத்து விளக்குக? (12புள்ளிகள்)

ஆ)“பாடசாலைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தைகளைப் பின்பற்றாத மாணவர்கள் பிழையான சீராக்கம்பெற்ற மாணவர்களாகக் கொள்ளப்படுவர்.” பிழையான சீராக்கம் பெற்ற மாணவர்களின் (Maladjusted students) நடத்தைப் பண்புகளை இனங்கண்டு விளக்குக? (08புள்ளிகள்)

இ).பாடசாலை மாணவர்கள் பிழையான சீராக்கம் பெறுவதற்கான காரணங்களை ஆராய்க? (10 புள்ளிகள்)

03. அ). ஒரு பாடசாலையின் நிலமைக்குப் பொருத்தமான வழிகாட்டல் ஆலோசனைச் சேவையைப் பாடசாலையில் நிறுவும்போது பின்பற்றப்படும் ஆலோசனைச்சேவைக் கட்டமைப்புக்கள் தொடர்பாக ஆராய்க? (15 புள்ளிகள்)

ஆ) ஒரு மாணவன் தொடர்பான பிரச்சினைகள் இனங்காணப்பட்டதும் காலதாமத வழிகாட்டல் ஆலோசனையை ஆரம்பித்தல் அவசியமாகும். இந்தவை பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் விஞ்ஞானமுறையிலமைந்த படிமுறைகளையும் குறிப்பிட்டு விளக்குக?

(15 புள்ளி

## பகுதி II

04. "இன்றையநிலையில் கல்வித்துறையில் வழிகாட்டல் ஆலோசனை கூறுதல் என்பது முக்கிய துறையாகவும்,கல்விப் பரப்பாகவும் வளர்ச்சியடைந்துள்ளது."

அ)பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையின் முக்கிய நோக்கங்க விளக்குக?

(10 புள்ளிக

ஆ)பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையின் முக்கியத்துவத்தி உதாரணங்கள் மூலம் விளக்குக?

(10 புள்ளிக

இ)பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையில் பங்குகொள்ளும் ஆளணியினை குறிப்பிட்டு, அவர்களின் பணிகள் தொடர்பாக ஆராய்க?

(10 புள்ளிக

ஈ)பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையினால் மாணவர்கள், ஆசிரியர்க பெற்றோர்கள் ஆகியோர் பெற்றுக்கொள்ளும் நன்மைகளைக் குறிப்பிடுக?

(10 புள்ளிக

05. "பாடசாலைகளில் இடைநிலை மற்றும் உயர்தர மாணவர்களுக்கு தொழில்வழிகாட்டல் சேவையை வழங்கவேண்டியது அவசியமானதாகும்."

அ)பாடசாலைகளில் வழங்கப்படும் தொழில் வழிகாட்டல் சேவையின் ஊட அடையப்படும் முக்கிய நோக்கங்களைக் குறிப்பிட்டுவிளக்குக? (10 புள்ளிகள

ஆ)தொழில் வழிகாட்டல் பற்றிய பல்வேறு கொள்கைகளுள் கின்ஸ்பேர்க்கி (Ginsgberg Theory) தொழில் தேர்வு பற்றிய கொள்கை குறிப்பிடும் மூன் கட்டங்களையும் விளக்குக?

(10 புள்ளிகள்

இ)வழிகாட்டல் ஆலோசனை சேவையினை வழங்கும்பொருட்டு பிள்ளைகளை முழுமையாக விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இவ்வகையில் ஆலோசனைச் சேவைக்கான தகவல்களைச் சேகரிக்கும் நுட்பங்களில் பேட்டிகாணல் முறையினால் ஏற்படும் நன்மை மற்றும் தீமைகளை ஆராய்க? (10 புள்ளிகள்)

ஈ). வழிகாட்டல் ஆலோசனைச்சேவை அணுகுமுறைகளுள் இலக்குகளை உருவாக்கல் அணுகுமுறையின் முக்கியத்துவம் பற்றிவிளக்குக? (10 புள்ளிகள்)